RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1112

# வள்ளலார் மற்றும் பாரதியாரின் சமயச் சிந்தனைகள்

த. கோமதி [அ, *], வீ. தனலெட்சுமி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, தந்தைஹேன்ஸ் ரோவர் கல்லூரி, பெரம்பலூர்-621220, தமிழ்நாடு, இந்தியா

# The Religious Thoughts of Vallalar and Bharathiyar

T. Gomathi [a, *], V. Dhanalakshmi [a]

[a] Department of Tamil, Thanthai Hans Roever College, Perambalur-621210, Tamil Nadu, India

* Corresponding Author: gomathisiva82@gmail.com

Received: 23-08-2021
Revised: 17-07-2022
Accepted: 20-07-2022
Published: 09-09-2022

Check for updates

**ABSTRACT**

In the Nineteenth Century in Tamil Nadu, there was a remarkable awakening in the field of religion. A revolution took place all over the country due to the civilised language and cultural projections of foreign rule. Many new creations were created to revive and awaken the slumbering population. There was an awakening, especially in the spiritual world. Two great divisions arose in the spiritual-religious world. They were innovators who wanted to change Tamil society according to the newly spread English education system, culture, and religious objectives. On the other hand, the conservatives started to adhere to a tradition that should not be changed. Both these reactions are disastrous for the country. Therefore, Ramalinga Vallalar said that a conservative is also needed and also the innovative. In both cases, he did religious work with the aim of being a recipient and a pusher. This article examines his religious works and ideas in detail.

**Keywords:** Vallalar Thoughts, Bharathiyar Thoughts, Religious Thoughts, Culture

## முன்னுரை

பாரதியார் தமிழ்க் கவிதையுலகில் மாபெரும் சாதனை செய்து தமிழிலக்கியத்தின் போக்கைத் திருப்பினார். அவர் கவிதைகளில் அவருக்கும் முந்தைய கவிஞர்களின் பாதிப்பு இருக்கிறது. அவரிடம் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியவர்களுள் வள்ளலார் தனியிடம் பெறுகிறார். பாட்டின் எளிமை, நடை, வடிவம், சொல்லாட்சி போன்றவற்றில் இருவரும் தம் சமகாலத்துப் பிற புலவர்களை விட்டு விலகிப் புதுப்பாதை வகுத்தனர். எளிமை, இனிமை, தெளிவ என்னும் மூன்று அரிய பண்புகளை வள்ளலார் பாடல்களில் காணலாம் கும்மி, கண்ணி, சிந்து போன்ற நாட்டுப்பாடல் வடிவங்களும் அருட்பாவில் இடம்பெற்றன. இவையெல்லாம் பாரதியாரின் கவிதைப் பயிருக்கு உரமாயின என்பதை எடுத்தியம்புவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சாதிமத வேறுபாடற்ற ஒரு சமூகம்

தமிழகத்தில் சமய மதப் பிணக்குகள் வள்ளலார் காலத்தும் பாரதியாரின் காலத்தும் மலிந்திருந்தன. வள்ளலார் பழமையில் இருந்த கண்மூடிச் சடங்குகளை வேரறுத்துக் காலத்துக்கேற்ற புதியகோட்பாடுகளைச் சமயம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

புராணங்கள், சாஸ்திரங்கள் கூறும் கருத்துகளின் அடிப்படை உண்மைகளைத் தெரியாது சடங்கே பெரிதென வாழ்ந்த மக்களை அவர்சாடினார்.

“கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண்டாடும்

கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக”

என்று அவர் முழக்கமிட்டார் (Arunachalam, 1980).

“நன்று புராணங்கள் செய்தார் - அவர்

நல்லகவிதை பலபல தந்தார்

கவிதை மிக நல்லதேனும்-அக்

கதைகள் பொய்யென்று தெளிவறக் கண்டோம்”

என்று பாரதியார் வள்ளலாரை அடியொற்றி உரைப்பதும் காணற்கு உரியதாகும் (Lakshmanan, 2000). வள்ளலாhர் அறிவொன்றே தெய்வம் எனக் கூறினார். அவர்கண்ட அந்த ஒரு தெய்வ நெறிதான் - அருளும் அறிவுமாக இருக்கும் அருட்பெருஞ்சோதி நெறி. இதையே பாரதி,

“ஆயிரம் தெய்வங்கள்உண்டென்று தேடி

அலையும் அறிவிலிகாள் -பல்

லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்

டாமெனல்கேளீரோ”

என்னும் பாரதி பாடலில் எதிரொலிக்கிறது (Lakshmanan, 2000).

வள்ளலாரின் அருட்பாவில் உள்ள எளியபதம், எளிய நடை, எளிய சந்தம், பொதுமக்கள்விரும்பும்மெட்டு இவை தமிழுக்குப்புத்துயிர்தந்தன என்பதைப் பாரதியார் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். கம்பன்காலம் தொட்டு வள்ளலார் வரை வந்த தமிழ்க் கவிதையின் எளிமைத் தன்மையைப் பாரதியார் அடையாளம் கண்டுகொண்டார்

“சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது

சொல் புதிது சோதிமிக்க நவகவிதை

எந்நாளும் அழியாத மகாகவிதை”

என்று அவர் பாடியப்போது அந்த அடையாளம் என்னவென்று தெரிகிறது (Bharathiyar, 2005). யாப்பிNலு புதுமை, சொல்லாட்சிகள் எளிமை, கருத்தில் புதுமை என்றெல்லாம் வள்ளலார் நவகவிதை வடிவ மாற்றத்தைக் காட்டினார். அன்றைய பிற புலவர்கள் யமகம், திரிபு சிலேடை பாடிக்கொண்டிருந்த நேரம் அது. வள்ளலாரோ பாமரத் தமிழில் எளிய மக்களுக்குப் பாடியது பாரதியாரின் கவனத்தை ஈர்த்திருக்க வேண்டும்.

“அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற

உத்தமர்தம் உறவு வேண்டும்”

“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்”

“கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த

குளிர்தருவே தருநிழலே”

போன்ற அருட்பாக்களின் எளிமையும் இனிமையும் மக்கள் நெஞ்சைக் கவர்ந்தன (Arunachalam, 1980).

“வாரும் வாரும் தெய்வ வடிவேல்முருகரே”

“கைவிட மாட்டான் என்று ஊது சங்கே”

முதலிய இசைப்பாடல்கள் பாமரமக்களின் அன்றாட வழிபாட்டுக்குப் பயன்பட்டன (Arunachalam, 1980).

## நாட்டுப்பாடல் வடிவங்கள்

அருட்பாவில் “களக்கமறப் பொதுநடம் நான் கண்டு கொண்டதருணம்” என்ற ஒருபாடல் வருகிறது. அதனுடைய வடிவம் பாரதிக்கு ஒரு தூண்டு கோலாக இருந்திருக்கிறது. பாரதி கையாண்ட வடிவங்களில் சிந்து, கண்ணி, கும்மி என்பன புதியன இவை இசைப்பா வடிவங்கள்.

பலவகைச் சந்தங்களில் அமைக்க இடம் தருபவை. நாட்டுப்பாடல் வடிவங்களான இவை எளிய மக்களின் வாயில் பழகுத்தமிழாகப் பொலிபவை. இந்த வடிவங்கள் தாயுமானவர் பாடல்களில் முளைவிட்டு அருட்பாவில் தழைத்தன. பாரதியார் கவிதைகளில் பூத்து மலர்ந்தன.

## நாயக நாயகி பாவம்

பாரதியாரின் கண்ணன் பாடல்களில் சில நாயக நாயகி பாவம்சேர்ந்தவை தலைவி ஒருத்தி தலைவனின் அன்புக்காக ஏங்கும் மன உருக்கத்தைத் தெளிவாகக் காட்டுபவை. இது புதிதில்லை. தேவரா, திருவாசகங்களிலும், ஆழ்வார் பாசுரங்களிலும் வள்ளலாரின் அருட்பாவிலும் காணமுடிகிறது. பாரதிதன்னைக் கண்ணனாக எண்ணிக் கண்ணம்மாவிற்கு உருகுவது அகத்துறையில் ஒரு புதுமை. தன்னை காண வராத கண்ணனை

“நேரம் முழுவதிலும் அப்பாவிதன்னையே - உள்ளம்

நினைத்து மருகுதடி தங்கமே தங்கம்”

என்று தோழியிடம் கூறி வருந்துவது ஒப்பு நோக்கற்குரியது (Lakshmanan, 2000). பாரதியின் கண்ணம்மாவோ,

“கண்கள் உறங்கலெனும் காரியமுண்டோ?

கண்ணன் கையிரண்டும் கட்டல் இன்றியே”

இவை போலப் பல ஒப்புமைகள் இருவர் பாடல்களிலும் காணகிடக்கின்றன (Lakshmanan, 2000).

## சமூக உணர்வு

வள்ளலார் சாதிக் கொடுமைகளை வெறுத்த ஒரு சமூக சீர்திருத்தவாதி ஆவார் (Roopa, 2021). அருட்பாவில் பல இடங்களில் அதுபற்றிய கருத்துகளை காணலாம். அந்நோக்கில் அவர் ஏற்படுத்திய அமைப்புக்களான சன்மார்க்க சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை ஆகியவை தக்கச் சான்றுகள் ஆகும். பாரதியும் இதை பின்வருமாறு வழிமொழிகிறார்.

“சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்” (Lakshmanan, 2000)

வள்ளலாரின் அருட்பெருஞ்சோதி வழிபாடு அறிவு கருணையுடன் சோர்ந்திருக்கும் ஞான வழிபாடே, தவிர வேறில்லை.

“அருளறிவொன்றே அறிவு மற்றெல்லாம்

மருளறிவென்றே வகுத்த மெய்ச் சிவமே” (Arunachalam, 1980)

என்று அகவலில் வள்ளலார் பாடுவதை,

“அறிவொன்றே தெய்வமம் எனல் கேளீரோ”

என்ற பாரதியின் பாடலில் காணமுடிகிறது (Lakshmanan, 2000).

## வேறுபாடு

பல ஒப்புமைகள் இருந்தலும் வள்ளலாருக்கும் பாரதிக்கும் இடையே வேறுபாடுகளும் உள்ளன. வள்ளலாரின் அருட்பா இலக்கிய ஏற்பு பெற்றதாயினும் அவர் முழுக்க முழுக்கச் சமய வாழ்வுக்கும் பக்தி நெறிக்கும் தம்மை ஆட்படுத்திக் கொண்டவர். அவர் காலத்தில் அரசியல் எழுச்சியோ விடுதலை வேட்கையோ இல்லை.

பாரதிக்கோ பின்னவை இரண்டுமே உயிர் மூச்சு, சமயமும் பக்தியும் இரண்டாமிடத்துப் பெறுவனவே. இந்த பகைப் புலத்தை புரிந்து கொண்டால் பாரதியின் பாடல்களில் இருக்கும் வேகம், உணர்ச்சி, வீறு இவற்றுக்குக் காரணம் புரியும், கவிமை நீருற்று போலத் தண்மையுடையதாய் அருட்பாவில் இருக்க, பாரதி பாட்டில் அது தீயாய்க் கனலாய்ச் சுடுவதற்கு இதுவே காரணம்.

சமயம், பக்தி, அனுபூதி என்ற வரிசை புதிதில்லை, பழையனவே வள்ளலாரில் சில இடங்களில் புதிய வடிவங்கள் கொண்டன. ஆனால் பாடுபொருள் தொன்று தொட்டு வந்ததே. பாரதிக்கோ பொருளும் புதிது சொல்லும் புதிது. குடுகுடுப்பைகாரன் முதல் புதிய ஆத்திச்சூடி வரை அவன் புதுமை கண்டான் அவன் அனைத்தையும் அழகுறச் செய்தான்.

பாரதியாரோ புதுயுகக் கவி. ஒன்றின் முடிவு இன்னொன்றின் தொடக்கம். இரண்டு சந்திக்கும் புள்ளி ஒரு சமுதாயத்தின் திருப்புமுனை. அந்தத் திருப்பத்தை வள்ளலார் தொடங்கினார். பாரதி முடித்து வைத்தார்.

## முடிவுரை

தமிழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமயம், சமூகம், இலக்கியம் என்னும் மூன்று நிலைகளிலும் வள்ளலாரும் பாரதியும் ஆற்றிய மறுமலர்ச்சி பணிகள் மிக அதிகம் இந்தப் புதிய விழிப்புக்கு பலர் காரணமாக இருந்தாலும் வள்ளலாரும் பாரதியும் குறிப்பிடத்தக்க இடம்பெறுகின்றன. பழமையில் இருந்த கண்மூடி சடங்குகளை வேரறுத்து காலத்துக்கேற்ற புரட்சிகளை புகுத்தினார் வள்ளலார். அவரை பின்பற்றியே பாரதியும். புராணங்கள் சாத்திரங்கள் கூறும் உண்மைகளை தெரியாது சடங்கே பெரிதென வாழ்ந்த மக்களை சாடினார் பாரதியார். இதிலிருந்து பாரதியார் தமக்கு முன்னர் வாழ்ந்த வள்ளலாரை நன்கு அறிந்திருந்தார். தமிழக மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களின் ஒருவராக அவரைப் போற்றினர் அவருடைய பாடல்களின் வடிவங்களைப் பின்பற்றினர். காலச் சூழலுக்கு ஏற்ப அவரிடம் வேறுபட்டுப் புதிய பாடுபொருள் கொண்டார் என்பன தெளிவாகின்றன. வள்ளலாரைப் பாரதியின் முன்னோடி என்று சொல்லும் அளவுக்குத் தாக்கம் நிறைய உள்ளது என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் முடிவாகும்.

## References


Arunachalam, M., (1980) Vallalar Valvum Thathuvamum, Madurai Kamaraj University, Madurai, India.

Bharathiyar, (2005) Bharathiyar Kanda Samuthaiyam, Chennai, India.

Lakshmanan, R., (2000) Subramaniya Bharathiyar, Uma Pathippagam, Chennai, India.

Roopa, M., (2021) The Theological Priciples of Siddhar and Vallalar Songs, International Research Journal of Tamil, 3(S-2), 107-111. https://doi.org/10.34256/irjt21s221



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License